இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 10-02-2025

# உச்சந்தலையில் கொட்டும் உச்சநீதிமன்றம்

தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவியின் உச்சந்தலையில் கொட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். அவருக்கு உறைக்குமா எனத் தெரியவில்லை.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் நியமனத் திருத்த மசோதா உட்பட தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் முரண்டு பிடித்து வருகிறார் ஆளுநர் ரவி. 2020 -23 காலக்கட்டத்தில் 14 மசோதாக்கள் தமிழ்நாடு அரசால் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் 2 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டு, 12 மசோதாக்களை மாநில அரசுக்கே திருப்பி அனுப்பி விட்டார் ஆளுநர் ரவி. இந்த மசோதாக்களை சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி மாநில அரசு சார்பில் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரண்டாவது முறையும் அனுப்பினால் ஒப்புதல் தர வேண்டும். உடனே ஆளுநர், அந்த 12 மசோதாக்களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டார். அங்கு கிடப்பில் கிடக்கிறது. இது மாநில அரசை, பல்கலைக் கழகங்களை முடக்கும் செயல் ஆகும்.

இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்குகள் நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

**★ தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்கள் மீது எந்த முடிவும் எடுக்காமல் நிறுத்தி வைப்பதற்கான காரணம் என்ன?**

**★ இரண்டு மசோதாக்களை ஆளுநர் ஏன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்?**

**★ 10 மசோதாக்கள் மீது முடிவு எடுக்க மறுத்ததற்கான காரணம் என்ன?**

**★ அரசு மறுபடியும் மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பும் போது மசோதாக்களை ஆளுநரால் நிறுத்திவைக்க முடியுமா?**

**★ இவ்வளவு காலமாக ஏன் மசோதாக்கள் மீது முடிவெடுக்கவில்லை?**

**★ மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் ஆளுநர் நிறுத்தி வைத்தார் என்றால் அது எந்த பிரிவின் படி? அரசியல் சாசனம் 200 அல்லாமல் வேறு ஏதேனும் விதிமுறை உள்ளதா?**

- என்று முதல் நாள் விசாரணையில் சரமாரியாக கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்ற நீதிபதிகள், "ஆளுநர் தனக்கு வேண்டியபடி சுயமாக முடிவு எடுத்துள்ளார். எந்த ஆதாரங்களும் ஆவணங்களும் இல்லாமல் மசோதாக்களை நிறுத்தி வைத்ததற்கு ஆதரவாக வாதிடுவதை ஏற்க முடியாது. ஆளுநர் ஏன் மசோதாக்களை நிறுத்தி வைத்தார் என்பதை தெரிவிக்க வேண்டும்" என்று அட்டர்னி ஜெனரலிடம் நீதிபதிகள் கண்டிப்புடன் தெரிவித்தனர். "10 மசோதாக்கள் மீது எந்த முடிவும் எடுக்காமல் மசோதாக்களை நிறுத்தி வைத்ததற்கு என்ன காரணம் என்பதை நாளை தெரிவிக்க வேண்டும்" என்றும் உத்தரவிட்டார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

**தமிழ்நாடு அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி, அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, வில்சன் ஆகியோர் வாதிட்டனர். 2023 பஞ்சாப் வழக்கில் நியாயமான காலத்திற்குள் மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவுகளை எடுக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்புகளை சுட்டிக்காட்டி இவர்கள் வாதிட்டனர். அரசியல் சாசனம் பிரிவு 200 இன் படி மாநில அமைச்சரவை ஆலோசனைபடிதான் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும், அதற்கு மாறாக ஆளுநர் வேறு முடிவை எடுக்க இயலாது சில மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்றால் கூட, மாநில அமைச்சரவை ஒப்புதலை பெற்றுதான் அனுப்பமுடியும், தன்னிச்சையாக அனுப்ப இயலாது, மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது சட்ட விரோதம், விதிமுறைகளுக்கு எதிரானது, மசோதாக்களுக்கு அனுமதி தராமல் தாமதம் செய்வது என்பது ஜனநாயக விரோத செயல், அரசியல்சாசன பதவி வகிக்கும் ஒருவர் அரசியல்சாசன விதிகளுக்கு மாறாக ஒரு மாநிலத்தின் மக்களை அவமதிப்பது, மாநிலத்தை செயல்பட விடாமல் தடுப்பது என்பது ஜனநாயகத்தின் தோல்வி ஆகும் என்றும் தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர்கள் வாதங்களை வைத்தார்கள்.**

உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீண்டும் தங்களது கேள்விக் கணைகளை ஆளுநர் தரப்புக்கு எதிராகத் தொடுத்தார்கள்.

**★ மசோதாக்கள் மீது ஒப்புதல் வழங்காமல் நிறுத்திவைத்தால் அதற்கான காரணத்தை மாநில அரசுக்கு தெரிவிக்காமல் இருந்தால் மாநில அரசுக்கு எப்படி தெரியும்?**

**★ மசோதாக்கள் மீது முடிவு எதுவும் எடுக்காமல் நிறுத்தி வைத்தால் அடுத்து என்ன நடவடிக்கை?**

**★ மசோதாவை நிறுத்தி வைப்பது குறித்து அரசியல் சாசனம் 200 ஆவது பிரிவு எதையும் கூறவில்லை. அப்படியானால் அடுத்த நிலை என்ன?**

**★ பல்கலைக்கழக மசோதா ஒன்றிய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்த நடவடிக்கை என்ன?**

**★ மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்?**

**★ மசோதாக்களை கிடப்பில் போட்டு, மாநில அரசுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது.**

**★ மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்போது குறிப்பு ஏதும் இல்லாமல் அனுப்புவது ஏன்?**

**★ நாட்டின் குடியரசுத் தலைவர், அவராகவே ஆளுநரிடம் கேட்டு தெரிந்து கொள்வாரா?**

**★ தமிழ்நாடு அரசின் மசோதா விவகாரத்தில், குடியரசுத் தலைவர் எப்போது முடிவை அறிவிப்பார்?**

- இப்படி சரமாரியான கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், மசோதாவை நிராகரிக்க ஆளுநர் காரணம் தெரிவிக்க வேண்டும் என்று கண்டிப்புடன் தெரிவித்தனர். ஒன்றிய அரசின் சார்பில் வாதாடிய அட்டர்னி ஜெனரலிடம், "அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளதை வைத்து மட்டும் வாதிடவும்" என்றும் நீதிபதிகள் கண்டிப்போடு சொல்லி இருக்கிறார்கள்.

இந்த வாதங்கள் அனைத்தும் பிப்ரவரி 6,7 ஆகிய நாட்களில் நடைபெற்றவை ஆகும். பிப்ரவரி 10 ஆம் தேதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**பொதுவாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் முன்பு வழக்கறிஞர்கள் தான் வாதங்களை வைப்பார்கள். ஆளுநர் ரவி விவகாரத்தில் உச்சநீதிமன்ற நீதிபதிகளே அவருக்கு எதிராக வாதங்களை வைத்துள்ளார்கள். அந்தளவுக்கு சட்டமுரணாக அவர் நடந்து வருகிறார். அது உச்சநீதிமன்ற நீதிபதிகளையே கோபத்துக்குள்ளாக்கி இருக்கிறது. இதன்பிறகாவது ஆளுநர் திருந்துவாரா எனத் தெரியவில்லை.**




வேலூர் மாவட்டம் அணைக்கட்டு கெங்கநல்லூர் ஊராட்சியில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்காததை கண்டித்து நடந்த கண்டன பொதுக் கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பேசினார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு கல்விக்குத் தடை விதிக்கும் இரக்கமற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு!

# அநீதியின் உருவம் பா.ஜ.க. என்பது மீண்டும் நிரூபணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, பிப். 10 -**

**"இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு கல்விக்குத் தடை விதிக்கும் இரக்கமற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு" என்றும், "அநீதியின் முழு உருவம் பா.ஜ.க. என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது" என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தமிழ்நாட்டு மாணவர்களுக்கான ரூ.2152 கோடியை பிற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கியதைக் கண்டித்து இந்த கண்டன அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்.**

தேசிய கல்விக் கொள்கையையும், அதன்வழி மும்மொழிக் கொள்கையையும் திணிப்பதை நிராகரித்த காரணத்துக்காக, தமிழ்நாட்டு மாணவர்களுக்குரிய 2,152 கோடி ரூபாயை நிதியை பறித்து, பிற மாநிலங்களுக்கு அளித்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டுக்கு எதிரான ஒன்றிய பா.ஜ.க. அரசின் அட்டூழிய மனப்பான்மைக்கு அளவே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.**

**தேசிய கல்விக் கொள்கையையும், அதன்வழி மும்மொழிக் கொள்கையையும் திணிப்பதை நிராகரித்த காரணத்துக்காக, அப்பட்டமான அச்சுறுத்தல் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். தமிழ்நாட்டு மாணவர்களுக்குரிய 2,152 கோடி ரூபாயைப் பறித்து, தற்போது வேறு மாநிலங்களுக்கு அளித்துள்ளனர். தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் மாணவர்களைத் தண்டிக்கும் நோக்கில் இத்தகைய வலுக்கட்டாயமான செயலைச் செய்கின்றனர்.**

**இரக்கமில்லாத**
**பா.ஜ.க. அரசு!**

**இந்திய வரலாற்றில் வேறு எந்த அரசும் ஒரு மாநிலத்தை அரசியல்ரீதியாகப் பழிவாங்குவதற்காக மாணவர்களின் கல்விக்குத் தடை ஏற்படுத்தும் அளவுக்குக் இரக்கமில்லாமல் நடந்துகொண்டதில்லை.**

**தமிழ்நாட்டு, தமிழ் மக்கள் மீதான வெறுப்பு மற்றும் நமக்கு இழைக்கப்படும் அநீதியின் முழு உருவம் பா.ஜ.க. என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணம் ஆகியுள்ளது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

### மகளிர் டி 20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் கோப்பை வெல்லத் துணை புரிந்த கமாலினி –கோ – கோ உலகக் கோப்பை உயர் பிரிவில் கோப்பை வெல்லத் துணை புரிந்த வி.சுப்பிரமணிக்கு

# உயரிய ஊக்கத் தொகையாக தலா ரூ.25 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, பிப். 10 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலேசியாவில் நடைபெற்ற மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக்கோப்பைபோட்டிகளில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்குத் துணைபுரிந்த தமிழ்நாட்டு வீராங்கனை செல்வி கு. கமாலினிக்கு ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.**

**டெல்லியில் நடைபெற்ற முதல் கோகோ உலகக் கோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீரர் வி. சுப்ரமணிக்கு உயரிய ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.**

மலேசியாவில் 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகள் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த செல்வி கு. கமாலினி இந்திய அணியில் இடம் பெற்றிருந்தார். அவர்தான் விளையாடிய ஏழு போட்டிகளில் ஒரு அரைச்சதம், 143 ரன்கள், 2 கேட்சுகள், 4 ஸ்டம்பிங் என நிகழ்த்தி அசாத்திய சாதனைகள் புரிந்துள்ளார். இந்த போட்டிகளில் செல்வி கு. கமாலினி அவர்களின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

அதே போல், டெல்லியில் நடைபெற்ற முதல் கோகோ உலகக் கோப்பை போட்டிகள், ஜனவரி 13 முதல் ஜனவரி 19, 2025 வரை நடைபெற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த வி.சுப்ரமணி அபாரமாக விளையாடியதற்காக "சிறந்த அட்டாக்கர் விருதை" வென்றார். இறுதிப் போட்டியில் நேபாள அணியை 5436 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்து, இந்திய அணி கோகோ உலகக் கோப்பையை வென்றது. இந்த போட்டிகளில் வி.சுப்ரமணியின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலேசியாவில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் செல்வி கு. கமாலினியின் இந்தச் சாதனையைப் போற்றிப் பாராட்டும் வகையில், பல விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்று, தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைகள் சேர்த்திட ஊக்கமளிக்கும் வகையிலும் செல்வி கு. கமாலினிக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூபாய் 25 லட்சம் வழங்கிட நேற்று முன்தினம் (8.2.2025) உத்தரவிட்டார்.

மேலும், டெல்லியில் நடைபெற்ற முதல் கோகோ உலகக் கோப்பை போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த வி.சுப்ரமணி போல மேலும் பல விளையாட்டு வீரர்களும் வீராங்கனை களும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்றுத் தமிழ்நாட்டிற்கும் இந்தியா விற்கும் பெருமைகள் சேர்த்திட ஊக்கமளிக்கும் வகையில், அவருக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூபாய் 25 லட்சம் வழங்கிடவும் நேற்று முன்தினம் (8.2.2025) உத்தரவிட்டார்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரை கூட உச்சரிக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்வ,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யா னந்த்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் லட்சுமணன்,பேச்சி பாண்டியன்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, துணைச் செயலாளர் கள் தர்மன், சுரேஷ் கிரிஜா குமார், சுதா மூர்த்தி,தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன் மண்டல தலைவர்கள் மகேஸ்வரி,கதிஜா இக்லாம் பாசிலா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். நிறைவில் தச்சை பகுதி துணைச் செயலாளர் கோகிலாவாணி சுரேஷ் நன்றி உரையாற்றினார்.